## முறி வெளியீட்டின் மேலோட்ட விவரம்



# TEMASEK BOND

**5-ஆண்டுகால T2023-S$ முறி**
நிலையான வருடாந்தர
வட்டி விகிதம் **2.70%**
மொத்த முறி வெளியீடு **S$400** மில்லியன்

**சில்லறை முதலீட்டாளர்கள் முதலீடு செய்யலாம்**
**S$1,000 முதல் தொடங்குகிறது**

**பொதுப் பங்குச்சந்தை வெளியீட்டுக்கு செவ்வாய்க்கிழமை அக்டோபர் 23, நண்பகல் 12 மணிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்**

**பின்வரும் வழிகளில் விண்ணப்பிக்க நீங்கள் CDP கணக்கு வைத்திருக்கவேண்டும்:**

தானியங்கி வங்கி இயந்திரங்கள்
- DBS அல்லது POSB
- OCBC
- UOB

இணைய வங்கிச்சேவை தளங்கள்
- DBS அல்லது POSB
- OCBC
- UOB

கைப்பேசி வங்கிச் செயலி
- DBS அல்லது POSB

மேல்விவரம் அறிய, அன்புகூர்ந்து கீழ்காணும் இணையத்தளத்திற்குச் செல்லுங்கள்

**temasek.com.sg/bondoffer**

முறி வெளியீட்டின் மேலோட்டமான விவரங்களைத் ஆங்கிலம், சீனம், மலாய் அல்லது தமிழில் படித்தறிய கீழ்காணும் இணையத்தளத்திற்கு செல்லுங்கள்
**temasek.com.sg/bondoffer/downloads**[1]

இந்த முறிகள் அமெரிக்காவில் அல்லது அமெரிக்கர்களுக்கு வழங்கப்படாதிருக்கலாம் அல்லது விற்கப்படாதிருக்கலாம்.

16 அக்டோபர் 2018

TEMASEK

# முறிகளில் முதலீடு செய்வதற்குமுன் நான் அறிய வேண்டியவை என்ன?

## முறிகளில் முதலீடு செய்தால் என்னென்ன இடர்களை எதிர்நோக்குவேன்?

எல்லா முதலீடுகளுக்கும் இடர்கள் உண்டு. முறிகளில் செய்யும் முதலீடுகளும் இதில் உள்ளடங்கும்.

முறிகளில் முதலீடு செய்யும் நீங்கள், அடிப்படையில் முறி வெளியீட்டாளருக்குப் பணம் கடனாகக் கொடுக்கிறீர்கள்.

முறி நடப்பிலிருக்கும் காலகட்டத்தில், ஆண்டுக்கு இருமுறை உங்களுக்கு வட்டி தரப்படும். முறி முதிர்ச்சியடையும்போது மூலதனத் தொகை முழுமையாகக் கிடைக்கும் என நீங்கள் எதிர்பார்க்கலாம்.[2]

கடமை தவறுதல், வட்டி விகிதம், பணமாக்கல் நிலை, பணவீக்க இடர்கள் போன்ற முக்கிய இடர்களை[3] முறி முதலீட்டாளர்கள் எதிர்நோக்குகின்றனர்.

### கடமை தவறும் இடர்

முறி வெளியீட்டாளர் வட்டி செலுத்த அல்லது முதிர்ச்சியின்போது மூலதனத் தொகையைத் திருப்பிக்கொடுக்கத் தவறும்போது கடமை தவறும் நிலை எழும்.

வெளியீட்டாளரின் நிதி நிலைமை, கடன்கள், இதர பொறுப்புகள் ஆகியவற்றைப் பொறுத்து, ஒவ்வொரு வெளியீட்டாளரின் கடமை தவறும் நிலையும் மாறுபட்டிருக்கும்.[2]

முறி வாங்குவதற்குமுன் அதை வெளியிடுபவரின் கடன் தரத்தைப் பற்றி மேலும் தெரிந்து கொள்வது முக்கியம்.[2] அன்புகூர்ந்து பக்கங்கள் 5 மற்றும் 6-ல், "தெமாசெக்கின் கடன் தரத்தை நான் எப்படி புரிந்துகொள்வது?" என்ற பகுதியைப் பார்க்கவும்.

சில வெளியீட்டாளர்கள், அல்லது அவர்களது முறிகள், கடன் தர மதிப்பீட்டு நிறுவனங்களால் மதிப்பிடப்படுகின்றன. சொத்துத் தரம், ரொக்கப் புழக்கம், பணமாக்கல் நிலை, இதர காரணிகள் ஆகியவற்றை மதிப்பிட்டு நிறுவனங்கள் தங்கள் கருத்தை வெளியிடுகின்றன. கடன் தரத்தை மதிப்பிட ஒவ்வொரு நிறுவனத்திற்கும் சொந்த வரையறைகள் உள்ளன.[2]

வரலாற்றுப்படி, உயர் கடன் தரமுள்ள வெளியீட்டாளர்கள் கடமை தவறக்கூடிய சாத்தியம் குறைவு. இதனால் இந்த வெளியீட்டாளர்களின் வட்டி விகிதமும் பொதுவாகக் குறைவாகவே இருக்கும். மாறாக, குறைவான கடன் தரமுள்ள வெளியீட்டாளர்கள் உயர் வட்டி விகிதம் கொடுக்கக்கூடிய சாத்தியம் அதிகம். ஏனெனில், முதலீட்டாளர்கள் அதிக இடர் ஏற்கின்றனர்.[2]

**சராசரி வருடாந்தர நிறுவனக் கடமை தவறல் விகிதங்கள்[4]: 1998-2017 (%)**




Moody's Investors Service-யின் 15 பிப்ரவரி 2018 தேதியிடப்பட்ட வருடாந்தர கடமை தவறல் ஆய்வு: நிறுவனக் கடமை தவறல் மற்றும் தொகை மீட்பு விகிதங்கள், 1920-2017 அறிக்கையிலிருந்த புள்ளிவிவரங்களைக் கொண்டு தொகுக்கப்பட்டது.

## வட்டி விகித இடர்

முறியின் சந்தை விலை ஏறலாம் அல்லது இறங்கலாம். வட்டி விகிதம் உயர்ந்தால், உங்கள் முறியின் சந்தை விலை சரியக்கூடும். அதேபோல, வட்டி விகிதம் சரிந்தால், முறியின் சந்தை விலை உயரக்கூடும்.







ஏன் இப்படி நடக்கிறது?

வட்டி விகிதங்கள் உயரும்போது, உயர் வட்டி விகிதத்தில் வெளியிடப்படும் புதிய முறிகளில் முதலீடு செய்யக்கூடிய வாய்ப்பு முறி வாங்குவோருக்குக் கிடைக்கிறது. நீங்கள் கேட்கும் விலையைக் குறைத்தாலொழிய, உங்களது முறிகளை வாங்குவதற்கு யாரையேனும் ஈர்ப்பது சிரமமாக இருக்கக்கூடும். எனவே, வட்டி விகிதங்கள் உயரும்போது உங்கள் முறியின் சந்தை விலை சரியக்கூடும்.

உங்களது முறி முதிர்ச்சி அடைவதற்கு முன்பாக அதனை நீங்கள் விற்க விரும்பினால், நீங்கள் விற்கும்போது நிலவும் சந்தை விலை, நீங்கள் வாங்கிய விலையைவிடக் குறைவாக இருந்தால், உங்களது மூலதனத் தொகையில் ஒரு பகுதியை நீங்கள் இழக்கக்கூடும்.

## பணமாக்கல் இடர்

பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்டிருந்தாலும், சில முறிகளை வாங்குவதற்கு மிகச் சிலரே கிடைப்பார்கள்.

இக்கட்டான சந்தையில் அல்லது பொருளாதாரச் சூழ்நிலையில், முறிகளை வாங்குவதற்கு யாருமே இல்லாத நிலையும் ஏற்படலாம்.

இத்தகைய சூழ்நிலைகளில் உங்களது முறிகளை வாங்குவதற்கு யாருமே கிடைக்காமல் போகலாம்.

## பணவீக்க இடர்

பணவீக்கம் என்பது அதே அளவு பணத்திற்குக் குறைவாகக் கிடைக்கும் நிலையைக் குறிக்கிறது.

பணவீக்கம் உயரும்போது, நிலையான வட்டித் தொகைகள், முதிர்ச்சியின்போது திரும்பக்கிடைக்கும் மூலதனத் தொகை ஆகியவற்றின் மதிப்பு குறைவாக இருக்கும்.

1 சீனம், மலாய், தமிழ் பதிப்புகள் ஆங்கிலப் பதிப்பிலிருந்து மொழிபெயர்ப்பு செய்யப்பட்டவை. ஆங்கிலப் பதிப்புக்கும் மொழிபெயர்க்கப்பட்ட பதிப்புகளுக்கும் இடையில் வேறுபாடுகள் ஏதேனும் இருந்தால், தயவுசெய்து ஆங்கிலப் பதிப்பையே பயன்படுத்தவும்.

2 இது வெளியீட்டுச் சுற்றறிக்கையின் அல்லது விலையீடு துணை அறிக்கையின் ஒரு பகுதியல்ல, பொதுவான விவரமாக மட்டுமே வழங்கப்படுகிறது.

3 மற்ற முக்கிய இடர்களின் விளக்கமறிய, வெளியீட்டுச் சுற்றறிக்கையின் “இடர் காரணிகள்” பகுதியைப் பார்க்கவும்.

4 இது வெளியீட்டுச் சுற்றறிக்கையின் அல்லது விலையீடு துணை அறிக்கையின் ஒரு பகுதியல்ல, பொதுவான விவரமாக மட்டுமே வழங்கப்படுகிறது. இதுபோன்ற தகவலை இந்தப் பத்திரத்தில் உள்ளடக்க Moody’s Investors Service ஒப்புதல் அளிக்காததால், இதுபோன்ற தகவலுக்கு அது பொறுப்பாகாது. தெமாசெக் அல்லது வெளியீட்டாளர், தகவலின் சுயேச்சை மறுஆய்வு நடத்தவில்லை அல்லது துல்லியத்தைச் சரிபார்க்கவில்லை என்பதால், இதுபோன்ற தகவலுக்கு அவை பொறுப்பாகமாட்டா.

## எங்களின் முதலீட்டுப் பட்டியல்

### தொடங்கப்பட்டதிலிருந்து தெமாசெக்கின் நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு




- தெமாசெக் தனது முதலீடுகளின் உரிமையாளராக, வர்த்தக அடிப்படையில் அவற்றை நிர்வகிக்கும் ஒரு முதலீட்டாளர்.
- நீண்டகாலத்தில் நீடித்து நிலைக்கத்தக்க மதிப்பை ஈட்ட முயலும் பல தலைமுறைக்கால முதலீட்டாளராக நாங்கள் செயல்படுகிறோம்.
- எங்களது முதலீட்டுப் பட்டியல் S$308 பில்லியன்[5] மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் செறிவுவட்டம் கீழே காட்டப்பட்டுள்ளது.

### முதலீட்டுப் பட்டியலின் உலகளாவிய செறிவுவட்டம்[5]












## தெமாசெக்கின் உள்ளீடுகளும் வழங்கீடுகளும்

தெமாசெக்கின் நிதி மூலங்களில் பெரும்பகுதி எங்களது முதலீட்டுப் பட்டியலிலிருந்தும், முதலெடுப்புகள், லாப ஈவுகள், முதலீட்டுப் பகிர்ந்தளிப்புகள் ஆகியவற்றின் மூலமும் கிடைக்கின்றன.




5 31 மார்ச் 2018 நிலவரப்படி.

6 அடிப்படைச் சொத்துகளின் அடிப்படையிலான பகிர்ந்தளிப்பு.

7 பெரும்பாலும் ரொக்கம், ரொக்கச் சமன்கள், மற்றும் பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனத்திலுள்ள துணை-20% பாத்தியதையைப் பிரதிநிதிக்கும் முதலீடுகள்.

8 சிங்கப்பூர் நிதி அமைச்சர் (கூட்டிணைப்பு) சட்டம் (அத்தியாயம்183)-ன்கீழ், நிதி அமைச்சர், சிங்கப்பூர் அரசாங்கத்தின் சார்பில் நிறுவனங்களில் பங்குரிமை உள்ள நிறுவன அமைப்பாவார்.

9 சார்புள்ள செலவுகளில் நடைமுறை மற்றும் நிதியளிப்புச் செலவினங்கள்; கடமை, சட்டம், தணிக்கை, ஆலோசனை, இதர கட்டணங்கள் போன்ற பரிவர்த்தனை செலவுகள்; நிதிகளுக்கான நிதி நிர்வாகக் கட்டணங்கள்; மற்றும் இதர தொழில் செலவுகள் உள்ளடங்கும்.

10 லாபம் ஈட்டும் வழக்கமான நிறுவனங்களைப் போலவே தெமாசெக்கும் வரி செலுத்துகிறது, வரி செலுத்துவதிலிருந்து அரசுரிமை விலக்கு கோருவதில்லை.

# தெமாசெக்கின் கடன் தரத்தை நான் எப்படி புரிந்து கொள்வது?

## தெமாசெக் ஏன் முறிகள் வெளியிடுகிறது?

சுருக்கமாகக் கூறினால், தெமாசெக் அதன் நிதிக் கட்டொழுங்கின் அடையாளமாக, 2005 முதல் நிறுவன, சான்றுபெற்ற மற்றும் குறிப்பிட்ட மற்ற முதலீட்டாளர்களுக்கு முறிகளை வெளியிட்டு வருகிறது.

எங்களது தெமாசெக் முறிகளின் சந்தை விலைகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள், மற்ற முறிகளுடன் ஒப்புநோக்கையில், எங்களது கடன் தரத்தில் ஏற்படும் உத்தேச மாற்றங்களின் பொது சமிக்ஞைகளாகப் பயன்படுகின்றன.

முதலீட்டுப் பட்டியல் முதலெடுப்புகள், லாப ஈவுகள், முதலீட்டுப் பகிர்ந்தளிப்புகள் ஆகியனவே எங்களது அடிப்படை நிதி மூலங்கள். எங்களது முதலீடுகளுக்கு நிதியளிக்க நாங்கள் முறிகளைச் சார்ந்திருக்கவில்லை.

நாங்கள் தொடர்ந்து 11 வது ஆண்டாக, நிகர ரொக்க நிலையில் நிதி ஆண்டை நிறைவு செய்தோம். அதாவது, நாங்கள் எடுத்த கடனைவிட எங்களிடம் ரொக்கக் கையிருப்பு அதிகமாக இருப்பதை இது குறிக்கிறது.

## தெமாசெக்கின் கடன்கள் என்னென்ன?

எங்களது US$20 பில்லியன் உத்தரவாதமுள்ள உலகளாவிய இடைநிலைத் தவணைக்கால நோட்டுகள் திட்டம், US$5 பில்லியன் யூரோ வர்த்தகப் பங்குப் பத்திரங்கள் (ECP) திட்டம் ஆகியவற்றின்மூலம் முறையே நீண்டகாலக் கடனுக்கும் குறுகியகாலக் கடனுக்கும் இடையிலான நிதியளிப்பு நீக்குப்போக்குநிலை எங்களுக்கு இருக்கிறது.

31 மார்ச் 2018 நிலவரப்படி, எங்களது முதலீட்டுப் பட்டியலின் நிகர மதிப்பு S$308 பில்லியன். இது எங்களது S$12.8 பில்லியன் மொத்த கடனைவிட 24 மடங்குக்கு மேலாக அதிகம். மொத்த கடனில் S$11.4 பில்லியன் தெமாசெக் முறிகளும் S$1.4 பில்லியன் ECP-யும் உள்ளடங்கும்.

**மொத்தக் கடனால் வகுக்கப்பட்ட நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு[5]**




நீண்ட முதிர்ச்சிக்காலம் கொண்ட தெமாசெக் முறிகளுக்கு, கீழே காட்டப்பட்டுள்ள முதிர்ச்சிக்காலப் பகிர்ந்தளிப்புடன், 11 ஆண்டுகளுக்கு மேலான மதிப்பிடப்பட்ட சராசரி முதிர்ச்சிக்காலம் இருந்தது. அதே சமயத்தில், குறுகிய முதிர்ச்சிக்காலம் கொண்ட ECP-க்கு சுமார் இரண்டு மாதகால மதிப்பிடப்பட்ட சராசரி முதிர்ச்சிக்காலம் இருந்தது.

**நிலுவையிலுள்ள தெமாசெக் முறிகளின் முதிர்ச்சிக்கால விவரம்**

(31 மார்ச் 2018 நிலவரப்படி)




எங்களது தேவைகள் மற்றும் சந்தை நிலவரங்களின் அடிப்படையில், நாங்கள் இடையிடையில் புதிய முறிகளை வெளியிடக்கூடும். எடுத்துக்காட்டாக, 31 மார்ச் 2018 தேதிக்குப் பிறகு, நாங்கள் US$1.35 பில்லியன் மதிப்புள்ள புதிய T2028-US$ தெமாசெக் முறியை 1 ஆகஸ்ட் 2018 அன்று வெளியிட்டோம். இதனைத் தொடர்ந்து தற்போது T2023-S$ தெமாசெக் முறி வழங்கப்படுகிறது.

## புதிதாக என்ன செய்யப்படுகிறது?

இதற்குமுன், நிறுவன, சான்றுபெற்ற மற்றும் குறிப்பிட்ட மற்ற முதலீட்டாளர்களுக்கு மட்டுமே தெமாசெக் முறிகள் வழங்கப்பட்டன. இப்போது முதல்முறையாக, சில்லறை முதலீட்டாளர்களும் T2023-S$ தெமாசெக் முறியில் முதலீடு செய்ய விண்ணப்பிக்கலாம்.

## முக்கிய கடன் விகிதங்கள்

ஒரு முதலீட்டு நிறுவனமாக தெமாசெக்கின் நிதிநிலையை அடிப்படையாகக் கொண்ட முக்கிய கடன் தரக் குறியீடுகள்[11,12,13] கீழே காட்டப்பட்டுள்ளன. எங்களால் வட்டி செலுத்தக்கூடிய, கடன்களை அடைக்கக்கூடிய ஆற்றலை இவை பிரதிபலிக்கின்றன. இந்த விகிதங்களைப் பொறுத்தவரை, பெருக்கல் மடங்கு எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, அந்த அளவுக்குக் கடன் தரமும் அதிகமாக இருக்கும்.

### ஆற்றலாதாயம்

**24 மடங்கு**

மொத்த கடனால் வகுக்கப்பட்ட நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு




**9 மடங்கு**

மொத்த கடனால் வகுக்கப்பட்ட பணமாக்கக்கூடிய சொத்துகள்[7]




### வட்டி காப்பீடு

**24 மடங்கு**

வட்டிச் செலவினத்தால் வகுக்கப்பட்ட லாப ஈவு வருமானம்




**68 மடங்கு**

வட்டிச் செலவினத்தால் வகுக்கப்பட்ட தொடர் வருமானம்[14]




### கடனடைப்பு காப்பீடு

**18 மடங்கு**

ஓராண்டில் செலுத்தப்படவேண்டிய மொத்த கடனால் வகுக்கப்பட்ட தொடர் வருமானம்[14]




**4 மடங்கு**

அடுத்த 10 ஆண்டுகளில் செலுத்தப்படவேண்டிய மொத்த வகுக்கப்பட்ட ரொக்கம் மற்றும் குறுகிய கால முதலீடுகள்




## கடன் தர மதிப்பீடுகள்

தெமாசெக் முதன்முதலில் 2004-ல் தர மதிப்பீடு செய்யப்பட்டதிலிருந்து இதுவரை S&P Global Ratings மற்றும் Moody's Investors Service ஆகியவற்றிடமிருந்து முறையே **AAA/Aaa** ஒட்டுமொத்த நிறுவனக் கடன் தர மதிப்பீடுகளைப்[15] பெற்றிருக்கிறது. இதுவரை வெளியிடப்பட்டிருக்கும் தெமாசெக் முறிகள் அனைத்தும் மூன்று-A தர மதிப்பீடுகளைப் பெற்றுள்ளன.

5 31 மார்ச் 2018 நிலவரப்படி.

7 பெரும்பாலும் ரொக்கம், ரொக்கச் சமன்கள், மற்றும் பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனத்திலுள்ள துணை-20% பாத்தியதையைப் பிரதிநிதிக்கும் முதலீடுகள்

11 31 மார்ச் முடிவுற்ற ஆண்டுக்குரியது.

12 ஒரு முதலீட்டு நிறுவனமாக தெமாசெக்கின் கடன் தரக் குறியீடுகளை அடிப்படையாகக் கொண்ட எளிமைபடுத்தப்பட்ட படவிளக்கங்கள் இவை. 31 மார்ச் 2016, 2017, 2018 தேதிகளில் முடிவுற்ற ஆண்டுகளில் தெமாசெக் கடன் தர நிலையின் விளக்கமறிய, தயவுசெய்து வெளியீட்டுச் சுற்றறிக்கையின் "தெமாசெக்கின் தொழில் கடன் தர நிலை" பகுதியைப் பார்க்கவும்.

13 ஒரு முதலீட்டு நிறுவனமாக தெமாசெக்கின், அதாவது தெமாசெக் ஹோல்டிங்ஸ் (பிரைவெட்) லிமிடெட் (THPL) மற்றும் அதன் முதலீட்டு ஹோல்டிங் நிறுவனங்கள் (IHCs) ஆகியவற்றின் நிதி விவரங்களின் அடிப்படையிலானது. (IHCs) என்பன THPL-ன் நேரடியான மற்றும் நேரடியற்ற முற்றிலும் சொந்தமான துணை நிறுவனங்களாகும். இவற்றின் இயக்குநர் சபை அல்லது நிகரான ஆளுமை அவைகளில் THPL, முற்றிலும் சொந்தமான தெமாசெக் பிரைவெட் லிமிடெட் (TPL) மற்றும்/அல்லது TPL-ன் முற்றிலும் சொந்தமான துணை நிறுவனங்கள் ஆகியவற்றின் ஊழியர்கள் அல்லது பிரதிநிதிகள் உள்ளடங்குவர். THPL மற்றும் அதன் IHCs ஆகியவற்றின் அடிப்படை நடவடிக்கைகள் முதலீட்டு ஹோல்டிங், நிதியளிப்பு மற்றும்/அல்லது முதலீட்டு ஆலோசனையும் ஆலோசனை சேவைகளும் வழங்குதல் ஆகியன.

14 முதலெடுப்புகள், லாப ஈவு வருமானம், முதலீட்டு வருமானம் மற்றும் வட்டி வருமானம்.

15 தெமாசெக்கிற்கு அல்லது முறிக்குத் தரப்பட்டுள்ள கடன் தர மதிப்பீடுகள் கருத்துரை மட்டுமே, முறிகளை வாங்க, விற்க அல்லது வைத்திருக்க செய்யப்படும் பரிந்துரை அல்ல என்பதால், முதலீடு பொருத்தமானதா என்பதை முதலீட்டாளர்களே தீர்மானிக்கவேண்டும். குறிப்பாக, கடன் தர மதிப்பீடுகள் சில்லறை முதலீட்டாளர்களின் பயன்பாட்டுக்கானவை அல்ல, இந்த மதிப்பீடுகளைக் கருத்தில் கொண்டு சில்லறை முதலீட்டாளர்கள் எந்தவொரு முதலீட்டுத் தீர்மானமும் எடுக்கக்கூடாது. எல்லா முதலீட்டாளர்களும் தங்களது நிதி அல்லது மற்ற நிபுணத்துவ ஆலோசகருடன் தொடர்பு கொண்ட பிறகே கடன் தரமதிப்பீடுகளின் அடிப்படையில் தீர்மானங்கள் எடுக்கவேண்டும். S&P Global Ratings, Moody's Investors Service ஆகியன இத்தகைய தகவலை இந்தப் பத்திரத்தில் உள்ளடக்குவதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை என்பதால், இத்தகைய தகவலுக்கு அவை பொறுப்பல்ல.

# தெமாசெக் முறி என்பது என்ன?

TEMASEK BOND

## நான் எதில் முதலீடு செய்கிறேன்?

T2023-S$ தெமாசெக் முறி, தெமாசெக்கிற்கு முற்றிலும் சொந்தமான துணை நிறுவனமான தெமாசெக் பைனான்ஷியல் (IV) பிரைவெட் லிமிடெட் நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது.

முதலீட்டாளர்கள் தங்களது முறிகளின் மூலதனத் தொகைக்கு வட்டி, அல்லது கூப்பன், பெறுவார்கள். முறிகள் முதிர்ச்சியடையும்போது மூலதனத் தொகையைத் திரும்பப் பெறுவார்கள். செலுத்தப்படவேண்டிய எல்லா வட்டித் தொகைகளுக்கும், முதிர்ச்சியின்போது மூலதனத் தொகை முழுமையாகத் திருப்பித் தரப்படுவதற்கும் தெமாசெக் முழு உத்தரவாதமளிக்கிறது.

முறிகள் நடப்பிலிருக்கும் காலகட்டத்தில் அவற்றின் சந்தை செயல்பாட்டுக்கு தெமாசெக் உத்தரவாதம் அளிக்காது. முறிகள் சிங்கப்பூர் பங்குச்சந்தையில் சந்தை விலையில் விற்கப்படலாம் அல்லது வாங்கப்படலாம்.

அன்புகூர்ந்து பக்கங்கள் 1 மற்றும் 2-ல் "முறிகளில் முதலீடு செய்வதற்குமுன் நான் அறிய வேண்டியவை என்ன?" என்ற பகுதியில் எடுத்துக் கூறப்பட்டுள்ள இடர்களைப் பார்க்கவும்.

| | **வழங்கீடு**<br>நிறுவனங்களுக்கும், சான்றுபெற்ற மற்றும் குறிப்பிட்ட மற்ற முதலீட்டாளர்களுக்கும் | **பொதுப் பங்குச்சந்தை வெளியீடு**<br>சிங்கப்பூரிலுள்ள சில்லறை முதலீட்டாளர்களுக்கு |
|---|---|---|
| **வெளியீட்டாளர்** | தெமாசெக் பைனான்ஷியல் (IV) பிரைவெட் லிமிடெட் | |
| **உத்தரவாதம் அளிப்பவர்** | தெமாசெக் ஹோல்டிங்ஸ் (பிரைவெட்) லிமிடெட் | |
| **கூப்பன் விகிதம்** | ஆண்டுக்கு 2.70% நிலையான விகிதம்,<br>ஆறு மாதங்களுக்கு ஒரு முறை செலுத்தப்படும் | |
| **காலகட்டம்** | 5 ஆண்டுகள் | |
| **முதிர்ச்சியடையும் தேதி** | முன்கூட்டியே மீட்கப்பட்டு ரத்து செய்யப்படாமல், அல்லது வாங்கப்பட்டு ரத்து செய்யப்படாமல் இருந்தால், முறியின் விதிகளிலும் நிபந்தனைகளிலும் உள்ளபடி, 25 அக்டோபர் 2023 அன்று முதிர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. | |
| **வழங்கப்படும் அளவு:** அதிகபட்சம் S$400 மில்லியன், (S$500 மில்லியன் வரையிலான, அதிகரிப்புக்கு உட்பட்டது).<br>வழங்கப்படும் அளவுக்கு மேலாக விண்ணப்பங்கள் கிடைத்தால், பொது வெளியீட்டுக்கும் வழங்கீட்டுக்கும் இடையிலான இறுதி ஒதுக்கீடு மாறக்கூடும். | S$200 மில்லியன் | அதிகபட்சம் S$200 மில்லியன் |
| **குறைந்தபட்ச விண்ணப்பம்** | S$250,000, அல்லது S$250,000 வெள்ளிக்கணக்கிலான உயர் தொகைகள் | S$1,000 அல்லது S$1,000 வெள்ளிக்கணக்கிலான உயர் தொகைகள் |

மேல்விவரம் அறிய, அன்புகூர்ந்து **temasek.com.sg/bondoffer** இணையத்தளத்தைப் பார்க்கவும்.

வெளியீட்டின் இந்த மேலோட்டமான விவரத்தை 3 ஆகஸ்ட் 2018 தேதியிட்ட வெளியீட்டுச் சுற்றறிக்கை மற்றும் 16 அக்டோபர் 2018 தேதியிட்ட முக்கிய பொருள் விவர அறிக்கை ஆகியவற்றுடன் சேர்த்துப் படிக்கவேண்டும்.[16] மேலோட்டமான விவரத் தொகுப்பு, வெளியீட்டு சுற்றறிக்கை, விலையீட்டு துணை அறிக்கை, முக்கிய பொருள் விவர அறிக்கை ஆகியவற்றை, வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிடில் அல்லது பொருளடக்கத்திற்கு வேறுவிதமான தேவைகள் இல்லாவிடில், அதனதன் தேதிப்படி படிக்கவேண்டும். "தெமாசெக்" எனக் குறிப்பிடப்படும் இடங்களில், பொருளடக்கத்தின் தேவைப்படி, தெமாசெக் ஹோல்டிங்ஸ் (பிரைவெட்) லிமிடெட் (THPL), அல்லது THPL மற்றும் அதன் முதலீட்டு ஹோல்டிங் நிறுவனங்கள் கூட்டாகக் குறிப்பிடப்படுகிறது.

# எப்படி விண்ணப்பம் செய்வது?

**நீங்கள் முதலீடு செய்யத் தீர்மானிப்பதற்குமுன் 3 ஆகஸ்ட் 2018 தேதியிட்ட வெளியீட்டுச் சுற்றறிக்கை, மற்றும் 16 அக்டோபர் 2018 தேதியிட்ட விலையீடு துணை அறிக்கை மற்றும் முக்கிய பொருள் விவர அறிக்கை ஆகியவற்றைப் படிப்பது முக்கியம்.**

இந்தப் பத்திரத்திலுள்ள விவரங்கள் அல்லது நீங்கள் என்ன செய்யவேண்டும் என்பது பற்றி உங்களுக்கு மேற்கொண்டு கேள்விகள் இருந்தால், தயவுசெய்து உங்களது நிதி ஆலோசகரிடம் அல்லது மற்ற பொருத்தமான வல்லுநர்களிடம் ஆலோசனை பெறுங்கள்.

இந்த வெளியீட்டைப் பற்றி, அல்லது இந்த வெளியீட்டின் தொடர்பிலான வேறு விவகாரங்கள் பற்றி, தெமாசெக் நிதி அல்லது முதலீட்டு ஆலோசனை வழங்க முடியாது.

T2023-S$ தெமாசெக் முறியின் பொதுப் பங்குச்சந்தை வெளியீட்டின்கீழ் விண்ணப்பம் செய்ய உங்களிடம் CDP கணக்கு இருக்கவேண்டும். நீங்கள் முறியைச் சந்தையில் வர்த்தகப் பரிவர்த்தனை செய்ய எண்ணினால், உங்களது CDP கணக்குடன் இணைக்கப்பட்ட வர்த்தகப் பரிவர்த்தனை கணக்கும் உங்களுக்குத் தேவைப்படும். பொதுப் பங்குச்சந்தை வெளியீட்டின்கீழ் விண்ணப்பம் செய்வதற்கு வர்த்தகப் பரிவர்த்தனை கணக்கு தேவையில்லை.

## முக்கியமான தேதிகள்[17]

**புதன் 17 Oct** — பொதுப் பங்குச்சந்தை வெளியீட்டின்கீழ் விண்ணப்பங்கள் செய்யலாம்[18]

**பின்வரும் வழிகளில் விண்ணப்பிக்க நீங்கள் CDP கணக்கு வைத்திருக்கவேண்டும்:**



தானியங்கி வங்கி இயந்திரங்கள்
- DBS அல்லது POSB
- OCBC
- UOB



இணைய வங்கிச்சேவை தளங்கள்
- DBS அல்லது POSB
- OCBC
- UOB



கைப்பேசி வங்கிச் செயலி
- DBS அல்லது POSB

**செவ்வாய் 23 Oct** — பொதுப் பங்குச்சந்தை வெளியீடு முடிவடையும்

**புதன் 24 Oct** — பொதுப் பங்குச்சந்தை வெளியீட்டுக்கு அளவுக்கதிக விண்ணப்பங்கள் கிடைத்திருந்தால் குலுக்கல் நடத்தப்படும். செல்லுபடியாகாத அல்லது ஒருபகுதி மட்டுமே ஏற்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் பணத்தைத் திருப்பித்தரும் நடவடிக்கை தொடங்கும்.

**புதன் 24 Oct** — வெளியீட்டின் முடிவுகள் SGXNET-ல் அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது

**வியாழன் 25 Oct** — எதிர்பார்க்கப்படும் வெளியீட்டுத் தேதி

**வெள்ளி 26 Oct** — SGX-ST பங்குச்சந்தையில் பரிவர்த்தனை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது

16 முறிகளில் முதலீடு செய்வதன் தொடர்பிலான குறிப்பிட்ட சில இடர்களின் விளக்கத்தை அறிய வெளியீட்டுச் சுற்றறிக்கையின் பக்கம் 18-ல் இடம்பெறும் "இடர் காரணிகள்" என்ற பகுதியை அன்பு கூர்ந்து பார்க்கவும். "முறிகளின் கட்டணப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு வெளியீட்டாளரிடம் மற்றும்/அல்லது உத்தரவாதம் அளிப்பவரிடம் போதுமான ரொக்கப் புழக்கம் இருக்கும் என்பதற்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை" என்ற இடர் காரணியும் இதில் உள்ளடங்கும்.

17 கால அட்டவணை உத்தேசமானது மட்டுமே, மாற்றத்திற்கு உட்பட்டது. தேதிகளும் நேரங்களும் சிங்கப்பூர் தேதிகள் மற்றும் நேரங்கள் ஆகும். வெளியீட்டாளர் மற்றும் தெமாசெக், சிங்கப்பூர் பங்குச்சந்தையின் அங்கீகாரத்துடன் (தேவைப்பட்டால்) பொருந்தத்தக்க சட்டங்களின் வரையறைகளுக்கு உட்பட்டு, மேற்காணும் கால அட்டவணையை நீட்டிக்கலாம், குறைக்கலாம் அல்லது மாற்றியமைக்கலாம். குறிப்பாக, வெளியீட்டாளர் மற்றும் தெமாசெக், பொதுப் பங்குச்சந்தை வெளியீட்டை மற்றும்/அல்லது வழங்கீட்டை முன்கூட்டியே முடிவுக்குக் கொண்டு வர முழு அனுமதியுள்ளது. மேற்காணும் கால அட்டவணையில் செய்யப்படும் மாற்றங்கள் SGXNET அறிவிப்பின்மூலம் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டு, சிங்கப்பூர் பங்குச்சந்தையின் www.sgx.com இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

18 விண்ணப்பம் செய்யும் தனிமனிதர்களிடம் CDP பங்குப்பத்திரக் கணக்கு இருக்கவேண்டும்.

# எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தால், அன்புகூர்ந்து 23 அக்டோபர் 2018 நண்பகல் 12 மணி வரை வாரத்தில் ஏழு நாட்களும் செயல்படும் பின்வரும் 24 மணிநேர நேரடித் தொலைபேசி சேவைகளில் ஏதேனும் ஒன்றை அழையுங்கள்.

| வங்கி | தொலைபேசி எண் |
|---|---|
| DBS POSB | 1800 111 1111 (DBS)    1800 339 6666 (POSB) |
| OCBC Bank | 1800 363 3333 |
| UOB | 1800 222 2121 |

# முக்கிய விவரம்

**அமெரிக்காவில் அல்லது அமெரிக்காவுக்குள் வெளியிடப்படாது அல்லது விநியோகிக்கப்படாது.** இந்தப் பத்திரத்திலுள்ள விவரம் முழுவதும் நிபந்தனைக்குட்பட்டு, முழுமையான வெளியீட்டுச் சுற்றறிக்கை மற்றும் விலையீடு துணை அறிக்கை ஆகியவற்றுடன் சேர்த்துப் படிக்கப்படவேண்டும் (இந்தப் பத்திரத்திற்கும் வெளியீட்டுச் சுற்றறிக்கை மற்றும் விலையீடு துணை அறிக்கை ஆகியவற்றுக்கும் இடையில் ஏதேனும் குழப்பநிலை, வேறுபாடு அல்லது விடுபாடு இருந்தால் சுற்றறிக்கையும் துணை அறிக்கையுமே மேலோங்கி இருக்கும்). இங்கு பெரிய எழுத்துகளில் பயன்படுத்தப்பட்டிருக்கும் சொற்றொடர்களுக்கு வெளியீட்டுச் சுற்றறிக்கையிலும் விலையீடு துணை அறிக்கையிலும் தரப்பட்டுள்ள அர்த்தங்களே பொருந்தும்.

முறிகளுக்குச் சந்தா சேர விரும்புவோர் வெளியீட்டுச் சுற்றறிக்கை, விலையீடு துணை அறிக்கை, முக்கிய பொருள் விவர அறிக்கை ஆகியவற்றை முழுமையாகப் படித்து, வெளியீட்டுச் சுற்றறிக்கையிலும் விலையீடு துணை அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளபடி விண்ணப்பம் செய்யவேண்டும். இந்தப் பத்திரம் முதலீட்டு ஆலோசனை அல்ல, அந்த நோக்கம் கொண்டதும் அல்ல. முறிகளில் முதலீடு செய்வது பற்றி தீர்மானிப்பதற்கு உதவியாக உங்களது சொந்த முதலீட்டு, தொழில், சட்ட, வரி, நிதிநிலை மற்றும் இதர நிபுணத்துவ ஆலோசகர்களை நீங்கள் கலந்தாலோசிக்க வேண்டும். இத்தகைய முதலீடு உங்களது நிதி முதலீட்டு இலக்குகளுக்குப் பொருத்தமானதா என்பதை உங்கள் அனுபவம், இலக்குகள், நிதிநிலை, தேவையான இதர சூழ்நிலைகள் ஆகியவற்றின் அடிப்படையில் கவனமாகப் பரிசீலித்து தீர்மானித்த பிறகு மட்டுமே நீங்கள் முதலீடு செய்யவேண்டும். இந்தப் பத்திரம் தகவல் விளக்க அறிக்கை அல்ல, முறிகளைப் பெறுவதற்கு, வாங்குவதற்கு அல்லது சந்தா சேர்வதற்கு அழைப்பு விடுக்கவும் இல்லை. இந்தப் பத்திரத்தை வேறு எவருக்கும் அனுப்பி வைக்கவோ அல்லது விநியோகிக்கவோ கூடாது, எந்த வகையிலும் மறுபதிப்பு செய்யவும் கூடாது. இந்தப் பத்திரம் அமெரிக்காவில் அல்லது வெளியீடு அனுமதிக்கப்படாத வேறு நாட்டில் அல்லது சட்டப்படி வழங்கப்படக்கூடாத ஒருவரிடம் பங்குப்பத்திரங்கள் விற்பதற்கானதல்ல. 1933-ஆம் ஆண்டு அமெரிக்கப் பங்குப்பத்திரச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படாத அல்லது திருத்தத்தின்படி, பதிவிலிருந்து விலக்கு பெற்ற நிலையில், முறிகள் அமெரிக்காவில் வெளியிடப்படவோ அல்லது விற்கப்படவோ கூடாது. பரிந்துரைக்கப்படும் வெளியீட்டின் எந்தப் பகுதியையும் அமெரிக்காவில் பதிவு செய்ய அல்லது புழங்க எண்ணமில்லை. அமெரிக்காவுக்கு வெளியிலுள்ள அமெரிக்கர் அல்லாதவர்களுக்கு மட்டுமே முறிகள் வெளியிடப்படுகின்றன அல்லது விற்கப்படுகின்றன.